விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 041 வள்ளுவர் ஆண்டு 2057 தை 15 வியாழக்கிழமை (29.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வடமாகாணத்தின் மிகப்பெரிய கல்வி கண்காட்சி
EduExpo
2026 ஜனவரி மாதம்
30 31
9 AM TO 5 PM
(1995)

### சுமார் 36 வருடங்களுக்குப் பின்

## சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்த காங்கேசன்துறை பொதுச் சந்தை



(யாழ்ப்பாணம்)

சுமார் 36 வருடங்களுக்குப் பின் காங்கேசன்துறை பொதுச் சந்தை மீண்டும் சொந்த இடத்தில் நேற்றுப் புதன்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

உள்நாட்டு யுத்தம் காரணமாக 1990ஆம் ஆண்டு 15ஆம் பக்கம் பார்க்க

## ஒட்டுசுட்டானில் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஒட்டுசுட்டான் கரடிப்புலவு கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கரடிப்புலவு பழம்பாசி பகுதியைச் சேர்ந்த நாகையா நாகராஜா (வயது-41) என்பவரே உயிரிழந்தவராவார்.

குடும்பத்தைப் பிரிந்து தனிமையில் வசித்து வந்த குறித்த நபர், கடைக்குச் சென்று உணவு வாங்கிக் கொண்டு வீடு நோக்கி சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் அவரது தலையின் பின்பகுதியில் 15ஆம் பக்கம் பார்க்க

### ஐ.எம்.எப்பின் கடனை

## எவ்வித மாற்றங்களின்றி தொடர இணக்கம்



04ஆம் பக்கம் பார்க்க

### 14 வருடங்களுக்குப் பின்னர்


# பண்டத்தரிப்பு முகாமிலிருந்து இராணுவம் வெளியேறியது

(யாழ்ப்பாணம்)

சுமார் 14 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு காடாப்புலம் பகுதியிலுள்ள பொது மக்களின் காணியிலிருந்து இராணுவம் வெளியேறியுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)





### கைப்பேசியை பயன்படுத்தியவாறு

## பேருந்தைச் செலுத்திய சாரதி இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கைப்பேசியைப் பயன்படுத்தியவாறு பேருந்தைச் செலுத்திய தனியார் பேருந்துச் சாரதி ஒருவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் 15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் வீதி விபத்து

### நால்வர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 15ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் யாழ்.மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

### இந்தியத் துணைத் தூதுவரிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் யாழ்ப்பாணம் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். இந்தியத் 04ஆம் பக்கம் பார்க்க



## நீதிமன்றில் முன்னிலையானார்

### முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணைக்காக முன்னாள் 04ஆம் பக்கம் பார்க்க

### சாவகச்சேரி இராணுவ முகாமில்

## தன்னைத்தானே சுட்ட இராணுவச் சிப்பாய் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இராணுவ முகாமில் தன்னைத்தானே சுட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 33 வயதான இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு தற்கொலைக்கு முயற்சித்து வயிறு மற்றும் நெஞ் 15ஆம் பக்கம் பார்க்க

## உரிய தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டம் மேலும் வலுப்பெறும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அரச மருத்துவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் எட்டப்படாவிட்டால், அடுத்த 48 மணித்தியாலங்களின் பின்னர் தொழிற்சங்கப் போராட்டங்கள் மேலும் தீவிரப்படுத்தப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

சங்கத்தின் மத்திய செயற்குழு நேற்றுக் கூடி தற்போதைய நிலைமைகள் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TEACHME
SEARCH | COMPARE | FIND

Eduexpo
JAFFNA - 2025

# வட மாகாணத்தின் மிகப்பெரிய கல்வி கண்காட்சி

2026 ஜனவரி
30 31
9 AM – 5 PM

அனுமதி இலவசம்

Eduexpo
JAFFNA - 2025

- கல்வி உதவித்தொகை திட்டங்கள்
- தொழில் துறை வழிக்காட்டல்
- முழு / பகுதி நேர வேலை வாய்ப்புகள்
- உணவுத்திருவிழா
- Mind Master (சதுரங்கப் போட்டி)
- Hack Fest (Hackathon)
- The Performance Hub
- Paper/ Master Classes
- Social Media பிரபலங்களின் சந்திப்பு

## திருவள்ளுவர் கலாச்சார மையம் யாழ்ப்பாணம்.

(1995)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1936 - 10 - 14 | 2026 - 01 - 25 |

## சின்னத்துரை பவானி

யாழ்ப்பாணம் தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும் கனகசபை அவனியுவை வசிப்பிடமாகவும் தற்போது 82/5, கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பவானி அவர்கள் 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் கனகர் தம்பதியினரின் பாசமிகு மருமகளும் சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும் பாக்கியராசா(லண்டன்), சறோஜினி, பத்மநாதன்(ஜேர்மனி), சாந்தினி, காலஞ்சென்ற சிவநேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வசந்தாதேவி(ரதி), நவனகுமார்(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் - கிளிநொச்சி கச்சேரி), விஜயமேகலா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், ராசதுரை மற்றும் தம்பித்துரை, காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, பாலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிஷாந்தன் (கனடா), மிதுஷா (ஜேர்மனி), திவ்யா(அபிவிருத்தி உத்தியோகத்தர் - விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி), துவாரகன்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்), அபிரா, ஆரபி ஆகியோரின் பேர்த்தியும் டப்ஸ்னி, ஜஷ்விதன், அகர்னியா ஆகியோரின் அன்புமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 29.01.2026 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

82/5, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
(076 530 0637 போன்)

(6690)

## கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ். கிளை நடாத்தும்

### தைப்பூச நாள் வகுப்பும் புதிய அனுமதியும்

எதிர்வரும் 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நாள் வகுப்பும் புதிய அனுமதியும் காரைநகர் மற்றும் யாழ் கிளையில் நடைபெறவுள்ளதால் அதில் இணைந்து பயன்பெற விரும்புவோர் இணைந்து கொள்ள முடியும்.

### நடைபெறும் கலை வகுப்புகள்

- அறநெறி
- பண்ணிசை
- சங்கீதம்
- நடனம்
- மிருதங்கம்
- வயலின்
- வீணை
- சித்திரம்
- ஓகன்

காரைநகர் கிளை மு.ப 9.00 மணி
யாழ் கிளை பி.ப 5.00 மணி

இல. 428, கே.கே.எஸ் வீதி,
(வண்ணை சிவன் கோவில் அருகில்)
யாழ்ப்பாணம்
தொ.இல : 077 578 6638

(C-4905)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 01.01.2026 வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வம்

### திருமதி பாலபரமேஸ்வரி சண்முகராஜா



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 30.01.2026 நாளை வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஊர் வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பொலிகண்டி தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்படும். பின்னர் 31.01.2026 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible], [illegible]த்தை,
[illegible]

இங்ஙனம் :
குடும்பத்தினர்

(C-4004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியை இடைநிறுத்தியவர்களே சிறைச்சாலைகளில் அதிகம்!

## ஜனாதிபதி அநுரகுமார சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**

**சிறைச்சாலைகளில் உள்ளவர்களில் சுமார் 74 சதவீதமானோர் 10 ஆம் வகுப்பு வரை கல்வி கற்காதவர்கள் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.**

"கட்டியெழுப்புவோம் ஒன்றிணைந்த உறுதியுடன்" தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் கம்பளையில் நடைபெற்றபோதே ஜனாதிபதி இந்த விடயத்தினைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமப்புற வறுமையை ஒழிப்பதில், கல்விக்கு முன்னுரிமை அளித்துள்ளோம். கல்வியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் சகாப்தம் நமக்குத் தேவை. கிராமப்புற மக்களை சுழற்சி வறுமையிலிருந்து விடுவிப்பதற்கான முக்கிய வழி கல்விதான். அதனால் நாங்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

இலங்கையில் 38,000 மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை எதிர்கொள்ள முன்பே பாடசாலையை விட்டு வெளியேறுகிறார்கள்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் 13 ஆண்டுகள் கட்டாயக் கல்வியை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் 13 ஆண்டுகள் கல்வி கற்காமல் ஒரு பிள்ளை கூட பாடசாலையை விட்டு வெளியேற முடியாது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (நி)

# 'ஈ-கேட்' திறந்து வைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்திலுள்ள இலத்திரனியல் நுழைவாயில்கள் நேற்று முதல் உத்தியோக பூர்வமாகத் திறக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடனேயே இந்த "ஈ-கேட்" திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதன் ஊடாக விமான நிலையத்தின் வினைத்திறனை அதிகரிக்க முடியும் எனவும் பிரதம குடிவரவு அதிகாரி ஜ°ட் பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார். (நி)

# ஹரூன் அக்தர் கான் இலங்கை வருகை



(கொழும்பு)

பாகிஸ்தான் - இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக் குழுவின் 13 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக, பாகிஸ்தான் பிரதமரின் கைத்தொழில் மற்றும் உற்பத்தித் துறைகளுக்கான விசேட உதவியாளர் ஹரூன் அக்தர் கான், மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

இந்தக் கூட்டத்தொடர் இலங்கையின் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாகிஸ்தான் பிரதமரின் விசேட உதவியாளர் ஹரூன் அக்தர் கானுடன் தூதுக் குழுவினராக அந்நாட்டின் மேலும் 05 உயர் அதிகாரிகளும் வருகை தந்துள்ளனர். (நி)

# சிறுவர்களுக்கு சமூக ஊடகத் தடை? தீவிர பரிசோதனையில் அரசாங்கம்

(கொழும்பு)

இணையத்தளங்களில் பாடசாலை மாணவர்கள் தொடர்பான சர்ச்சைக்குரிய மற்றும் ஆபாசமான விடயங்கள் கட்டுப்பாடின்றி பரவி வருவதற்கு எதிராக மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, 18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கம் தற்போது தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.

டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன இது குறித்துத் தெரிவிக்கை யில், சமூக ஊடகங்கள் ஊடாக கடந்த காலங்களில் பதிவான பாரிய அளவிலான அசம்பாவிதங்களைக் கருத்திற்கொண்டு இந்தத் தடை குறித்த ஆலோசனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இவ்வாறான கட்டுப்பாடுகளை விதிக்கும் இறுதி முடிவு வெகுஜன ஊடக அமைச்சு அல்லது கல்வி அமைச்சினால் எடுக்கப்பட வேண்டும்.

கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்பட்டதும், அதனை அமுல்படுத்துவதற்கான முழுமையான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்கத் தயார் என அவர் தெரிவித்தார்.

சிறுவர்களின் மனநலம், இணையவழி அச்சுறுத்தல் கள் (Cyberbullying) மற்றும் தீய உள்ளடக்கங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கப் பல நாடுகள் ஏற்கனவே இவ்வாறான சட்டங்களைக் கொண்டு வந்துள்ளன.

இதன்படி, அவுஸ்திரேலியாவில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தத் தடை விதித்து கடந்த டிசம்பர் முதல் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இதனையடுத்து சீனா, பிரான்ஸ், அமெரிக்கா (புளோரிடா) ஆகிய பகுதிகளிலும் சிறுவர் கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# காற்றின் தரம் குறைவு

## முகக்கவசம் அணியப் பணிப்பு

(கொழும்பு)

இலங்கையின் முக்கிய நகரங்களில் காற்றின் தரம் பெரும்பாலும் மிதமான மட்டத்திலேயே காணப்பட்டது. இருப்பினும், எதிர்வரும் நாட்களில் சில பகுதிகளில் காற்றின் தரம் மோசமடையக்கூடும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கணித்துள்ளது.

முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, நுவரெலியா, எம்பிலிபிட்டிய, திருகோணமலை மற்றும் மொனராகலை ஆகிய பகுதிகளில் காற்றின் தரம் சீரான நிலையில் பதிவாகியுள்ளது.

இருப்பினும், அடுத்த 24 மணிநேரத்திற்கான முன்னறிவிப்பின்படி, யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் உள்ளிட்ட பல நகரங்களில் காற்றின் தரம் மிதமான மற்றும் சற்று ஆரோக்கியமற்ற நிலையில் இருக்கக்கூடும்.

எல்லை தாண்டிய காற்று மாசு காரணமாக, வடக்குப் பகுதியிலிருந்து வீசும் மாசடைந்த காற்றினால் அடுத்த இரண்டு முதல் மூன்று நாட்களுக்கு நாடு முழுவதும் காற்றின் தரம் சற்று ஆரோக்கியமற்ற நிலைக்குத் தள்ளப்படலாம் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது.

இதன் காரணமாக, பொதுமக்கள் இயன்றவரை முகக்கவசம் அணியுமாறு NBRO அறிவுறுத்தியுள்ளதுடன், சுவாசப் பாதிப்பு உள்ளவர்கள் அல்லது உடல்நலக் குறைபாடு உள்ளவர்கள் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# தொழிற்சங்க மிரட்டல்களுக்கு அடிபணிய மாட்டோம்

## அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

எந்தவொரு தொழிற்சங்கத்தினதும் அச்சுறுத்தல்கள் அல்லது மிரட்டல்களுக்கு அடிபணிந்து அரசாங்கம் தீர்மானங்களை எடுக்கப்போவதில்லை என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பதவிக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 213 பேருக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவையில் நிலவும் மனிதவள பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, மக்களுக்குத் தரமான சேவையை வழங்குவதே அரசாங்கத்தின் முக்கிய இலக்காகும்.

வெளிநாடுகளில் அதிக வேதனம் கிடைப்பதாகக் கூறிக்கொண்டு, நாட்டை விட்டு வெளியேறப்போவதாக மிரட்டி வேதன உயர்வுகளைக் கோரும் எந்தவொரு தரப்பினரின் கோரிக்கைகளுக்கும் அரசாங்கம் அடிபணியப் போவதில்லை என்று அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்றியது இங்கிலாந்து!

**இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**




கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் இடம்பெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து 357 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணியின் சார்பில் ஹரிப்ரூக் 136 ஓட்டங்களையும் ஜோ ரூட் 111 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணியின் சார்பில் தனஞ்ஜய டி சில்வா, வனிந்து ஹசரங்க மற்றும் ஜெப்ரி வாண்டர்சே ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர். இந்தநிலையில் 358 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 304 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியை தழுவியது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணியின் சார்பில் பவன் ரத்நாயக்க சதம் கடந்து 121 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

இதற்கமைய 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## எவ்வித ...

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்ட உடன்படிக்கையில் எவ்வித மாற்றங்களும் இன்றி, அதனைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல இருதரப்பினரும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

டித்வா புயலினால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்குமிடையிலான சந்திப்பு நேற்று (28) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

கடந்த 22ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்த இந்தப் பிரதிநிதிகள் குழு, நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டித்வா புயலினால் ஏற்பட்ட சேதங்களை நேரில் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களையும் நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இலங்கைப் பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்து வரும் வேளையில் இவ்வாறானதொரு அனர்த்தம் ஏற்பட்டமை குறித்து தமது வருத்தத்தைத் தெரிவித்த IMF பிரதிநிதிகள், சவால்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் அரசாங்கம் எடுத்த விரைவான நடவடிக்கைகளைப் பாராட்டினர்.

அரசாங்கம் அனர்த்தத்தைக் கையாண்ட விதம் குறித்து மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் கடந்த ஆண்டில் அரசாங்கம் கடைப்பிடித்த உயர் நிதி ஒழுக்கமானது இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு முக்கிய காரணியாக அமைந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

திறைசேரியில் மேலதிக உபரி நிதி காணப்பட்டதன் காரணமாகவே அனர்த்த நிவாரணப் பணிகளுக்காக 500 பில்லியன் ரூபாய் மேலதிக மதிப்பீட்டை முன்வைக்க அரசாங்கத்தினால் முடிந்ததாகக் குறிப்பிட்ட அவர்கள் இதனைப் பெரிதும் பாராட்டினர்.

இலங்கை தற்போது சரியான பொருளாதாரப் பாதையில் பயணிப்பதாகத் தெரிவித்த IMF பிரதிநிதிகள், நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் 6ஆவது தவணையை வழங்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் மார்ச் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர். (ம-7)

## நீதிமன்றில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (28) கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையானார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் நடைபெற்ற தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக சுமார் 166 இலட்சம் ரூபாவிற்கும் அதிக அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதாக ரணில் விக்கிரமசிங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாகக் கடந்த 2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட அவருக்கு பின்னர் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

குறித்த வெளிநாட்டுப் பயணம் உத்தியோகபூர்வமற்றது எனவும் அதற்காக அரச சொத்துக்கள் சட்டத்தின் கீழ் தவறு இழைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

குறித்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் நீதிமன்றில் முன்னிலையாகினார். (ம-7)

## இந்திய...

துணைத்தூதுவர் சாய் முரளியிடம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஒழுங்குபடுத்தலில் யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவருக்கும் வேலணைப் பிரதேச சபை தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையிலான குழுவினருக்குமிடையிலானக் கலந்துரையாடல் நேற்று (28) யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவர் அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலில் இந்திய இழுவைப்படகு மீனவர்களால் யாழ்ப்பாண மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது தொடர்பாகவும் நயினாதீவில் தற்சமயம் அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சூரியகல மின் உற்பத்தி தொடர்பான விடயங்கள் அதனுடன் தொடர்புடைய அபிவிருத்திகள் மற்றும் வேலணைப் பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் வேலணை பிரதேச சபையின் உப தவிசாளர் கணபதிப்பிள்ளை வசந்தகுமாரன், வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்கள் செல்லப்பா பார்த்தீபன், மங்களேஸ்வரன் கார்த்தீபன், நயினாதீவு கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் மற்றும் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் போன்றோர் கலந்துகொண்டனர். (ம-7)

## சர்ச்சைக்குரிய ஆட்ட நிர்ணய வழக்கு

# தம்புள்ளை தண்டர்ஸ் அணிக்கு 24 மில்லியன் ரூபாய் அபராதம்

சர்ச்சைக்குரிய ஆட்ட நிர்ணய வழக்கில் லங்கா பிரீமியர் லீக் தம்புள்ளை தண்டர்ஸ் அணியின் உரிமையாளர் தமீம் ரஹ்மானுக்கு 24 மில்லியன் ரூபா அபராதமும், நான்கு ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத்தரவினை பிறப்பித்தது.

இந்த வழக்கை ஐ.சி.சி ஊழல் தடுப்புப் பிரிவு, இலங்கையின் விளையாட்டு குற்றங்களைத் தடுப்பதற்கான சிறப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் ஒருங்கிணைப்புடன் விசாரித்தது.

2024 லங்கா பிரீமியர் லீக் போட்டியின் போது ஒரு வீரரை ஆட்ட நிர்ணயத்திற்கு அழுத்தம் கொடுக்க முயன்றதாக ரஹ்மான் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

அவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதைத் தொடர்ந்து நீதிமன்றம் தண்டனையை வழங்கியது.

பிரிட்டிஷ் குடியுரிமை பெற்றுள்ள பங்களாதேஷ் நாட்டவரான ரஹ்மான், வழக்கை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக குற்றத்தை ஒப்புக்கொள்ளத் தயாராக இருப்பதாக தனது சட்டக் குழு மூலம் நீதிமன்றத்திற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு 2024 லங்கா பிரீமியர் லீக் சீசனைச் சுற்றியுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த விரிவான விசாரணையின் ஒரு பகுதியாகும்.

இது தம்புள்ளை தண்டர்ஸ் உரிமையை இடைநிறுத்தவும் வழிவகுத்தது. (3)

## பண்டத்தரிப்பு...

2012 ஆம் ஆண்டு முதல் குறித்த காணி மற்றும் அங்கிருந்த பிரதேச சபையின் கொல்களம் (Slaughterhouse) ஆகியவை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த நிலையில் நேற்று புதன்கிழமை (28) இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக அக்காணியை சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் ஒப்படைத்தனர். அங்கிருந்த இராணுவத்தினர் அராலி இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் சுழிபுரம் பகுதியிலிருந்த இராணுவ முகாமும் அகற்றப்பட்டு அங்கிருந்தவர்கள் சங்கானைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் தற்போது பண்டத்தரிப்புக் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது. (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் சுற்றிவளைப்பில் 799 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய செயற்பாட்டில் போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது 799 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது 805 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது, 287 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 383 கிராம் ஐஸ் போதைப் பொருளும், 11 கிராம் 650 மில்லிகிராம் கொக்கேயின் போதைப்பொருளும், 865 கிராம் கஞ்சா போதைப்பொருளும், 78, 942 கஞ்சா செடிகளும், 111 கிராம் குஷ் போதைப் பொருளும், 095 கிராம் ஹசீஸ் போதைப்பொருளும், 481 போதை மாத்திரைகளும், 01 கிலோ 423 கிராம் 410 மில்லி கிராம் மதனமோதக மாத்திரைகளும், 01 கிலோ 286 கிராம் மாவா போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்களில் 9 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (8)

## யாழ். மாநகர சபையின்

# புதிய கட்டடத் தொகுதிக்கு முதல்வர் மதிவதனி விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய கட்டடத் தொகுதியின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிடுவதற்கான நேரடி கள விஜயம் ஒன்றை யாழ்.மாநகர முதல்வர் வி.மதிவதனி தலைமையில் மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் குழு கடந்த 20 ஆம் திகதி மேற்கொண்டிருந்தது.

மேற்படி விஜயத்தின் போது இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ள கட்டுமானப் பணிகள், செலவிடப்பட்டுள்ள நிதி விடயங்கள் மற்றும் இன்னும் பூர்த்தி செய்வதற்கு தேவையான நிதி மற்றும் முழுமைப் படுத்தப்படாத கட்டட தொகுதிகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டன.

நகர மண்டபத்தின் மீதமுள்ள கட்டுமான வேலைகள் தொடர்பிலும் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வது தொடர்பிலும் மேற்படி விடயம் தொடர்பாக முதல்வர் மதிவதனி நகர அபிவிருத்தி அமைச்சர் உள்ளிட்ட துறைசார் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு எழுத்து மூலமான அறிக்கையை சமர்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)





சாவகச்சேரி நகராட்சி மன்றமும் யாழ் இந்திய துணைத்தூதரகமும் இணைந்து தென்மராட்சி மண்ணில் முதன்முறையாக நடத்திய "தென்னிந்திய கலைஞர்களின் சாஸ்திரிய ஆற்றுகை" நடன நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்கிழமை மாலை நகராட்சி மன்றத்தின் பொன்விழா மண்டபத்தில் இடம் பெற்றது. (படங்கள்: சுபேசன்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3350

### வாகினி


எது இன்று உன்னுடையதோ அது மற்றொரு நாள் வேறொருவடையதாகிறது...



அப்புறம் ஏன் கடவுளே நான் வாங்கின கடன் மட்டும் என்னுடையதாகவே இருக்கிறது?

### ராகுலன்

பென்சிலில் இருந்து பேனாவுக்கு மாறும் போது தான் புரிகிறது



சில தவறுக்கு அழிக்க முடியாதவையாக இருக்கிறது என்று

### சுதர்சினி

தலைவலினு மாத்திரை போட்டாலும் உடம்புவலினு மாத்திரை போட்டாலும் வயித்துக்கு தான் போகுது...



ஆனா அதுக்கு எப்புடி தெரியுது தலைவலினு தலைக்கு போக உடம்பு வலி என்று உடம்புக்கு போக...

### சுகிர்தா

ரீச்சர் இதை எங்களுக்கு தண்டனை என்று நினைச்சாங்கள்




ஆனால் அதுல எவ்வளவு சந்தோஷம் இருந்தது என்று எங்களுக்கு மட்டும் தான் தெரியும்

### பிறேமலக்ஷன்



விதையில் தொடங்கி விறகில் முடிகிறது மரத்தின் வாழ்க்கை
கருவில் தொடங்கி கல்லறையில் முடிகிறது மனிதனின் வாழ்க்கை

### தர்சிகன்



சூரிய பொங்கல் இதுதானோ...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 'மறுபக்கம்' திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் 23 ஆவது திரைப்படக் காட்சியாக "மறுபக்கம்" என்ற தமிழ் திரைப்படம் எதிர் வரும் 01.02.2026 ஞாயிறுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடம் இல 18/2, அம்மன் வீதியிலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் திரையிடப்படவிருக்கிறது.

இந்திய தேசிய திரைப்பட விருது பெற்ற "மறுபக்கம்" என்ற எண்பது நிமிட நேரம் காட்சிப்படுத்தக் கூடிய மேற்படி திரைப்படம் 1990 களில் வெளிவந்து பலரது பாராட்டைப் பெற்றது. அதனை கே.எஸ். சேது மாதவன் நெறியாள்கை செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

## முத்துக்குமாரசாமி நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜனவரி 19 ஆம் திகதி அமெரிக்காவில் இயற்கை எய்திய ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான தம்பித்துரை முத்துக்குமாரசாமி அவர்களை நினைவுகூரும் நிகழ்ச்சி எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு, திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நினைவுகூர் நிகழ்ச்சியில் அனைவரையும் பங்கேற்று, அவருக்கான நினைவுச் சுடர் ஒன்றை ஏற்றி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# பேராசிரியர் புஸ்பரட்ணத்திற்கு உயர் விருது வழங்கிக் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவரும் வாழ்நாள் பேராசிரியருமான பரமு புஸ்பரட்ணம் அவர்களுக்கு சுவிஸ்லாந்து தமிழ்க் கல்வி சேவையும் தமிழ்ச் சங்கமும் இணைந்து உயரிய விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

தமிழர் பாரம்பரியம் பண்பாடு மற்றும் மரபுரிமை போன்றவற்றிற்கு சிறப்பான பங்காற்றியதற்காகவே அவருக்கு Out standing contribution to tamil History and Heritate எனும் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பண்பாடு, கலாசாரம் அதன் தொன்மை போன்றவற்றை அழிய விடாது பாதுகாப்பதுடன் அவற்றை எமது அடுத்த சந்ததிக்கு கைளிக்கும் ஒப்பற்ற பணியை வாழ்நாள் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் அவர்கள் மேற்கொண்டு வரும் நிலையில், அவரின் மேற் குறித்த பணியைப் போற்றும் வகையிலேயே இவ் விருது அவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. (க-8)



இணுவில் பொது நூலக கலை கலாசாரத்துறையின் ஆதரவில் இணுவில் கலை இலக்கிய வட்டம் நடத்தும் கவிதாயினி வித்தியா பாரதியின் "அன்புள்ள டைரிக்கு" கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் இடம்பெற்றது.

## மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

தாவடி ஸ்ரீ அம் பலவாண கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச நன்நாளான எதிர்வரும் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதன் முறையாக இவ் வருடம் மாலை உற்சவமாக மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

அன்று மாலை 5.30 மணியளவில் மூலமூர்த்தி முருகப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பூஜைகள் இடம்பெற்று தொடர்ந்து 6.30 மணியளவில் விஷேட வசந்த மண்டப தீப ஆராதனைகள் ஆலய பிரதம சிவாச்சாரியார் தாணு வாசுதேவ ஜெயவஸ் தாங்க குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

தொடர்ந்து முத்துக்குமார சுவாமி வள்ளி தெய்வயானை சமேதராக உள் வீதி வலம் வந்து 7 மணியளவில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய மஞ்ச இரதத்திலே வெளிவீதியுலா வலம் வரும் காட்சியும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# இலங்கை மின்சாரசபை ஓய்வூதியர் நலன்புரிச் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரிச் சங்க (வட மாகாணக்கிளை) வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இலங்கை மின்சாரசபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலக மேல் மாடி DPUK குணத்திலக்க அரங்கில் இடம்பெறவுள்ளது.

இலங்கை மின்சாரசபை ஓய்வூதியர் நலன்புரிச்சங்க தலைவரும் ஓய்வு நிலை மின்பொறியியலாளருமான ச.ஞானகணேசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.பிரபாகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் நிர்வாகத் தெரிவும் இடம் பெறவிருப்பதனால் இலங்கை மின் சாரசபையில் ஓய்வு பெற்றவர்களை கலந்து கொள்ளுமாறு இலங்கை மின் சாரசபை ஓய்வூதியர் நலன்புரிச்சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (8)

# வடக்கு மாகாண பொதுச்சேவை வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையில் காணப்படுகின்ற தொழில்நுட்பத்துறை சார்ந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படவுள்ளன.

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள பதவிகளாக:

மாகாண தொழில்நுட்ப வியல் சேவையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் - குடிசார் தரம் III அல்லது பயிற்சித் தரம்,மின்னியல் தரம் III அல்லது பயிற்சித் தரம், படவரைஞர் பயிற்சித்தரம்.

இதன் பொருட்டான முழுமையான விளம்பர அறிவித்தல்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை www.np. gov.lk எனும் மாகாண இணையத்தளத்தில் 'Exam and Recruitment Adver tisement 2026' எனும் பகுதியின் ஊடாகப் பார்வையிடவும், தரவிறக்கம் செய்யவும் முடியும்.

தகைமையுடைய விண்ணப்பதாரிகள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 2026.02.12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஆ.சிறி அறிவித்துள்ளார். (8)


# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 500 | 300 | 150 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 150 | 180 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 | 600 | 500 | 450 |
| தக்காளி | 500 | 550 | 600 | 600 | 550 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 150 | 200 | 150 | 200 | 100 |
| கோவா | 250 | 300 | 300 | 300 | 220 | 200 |
| கரட் | 350 | 420 | 400 | 450 | 450 | 350 |
| பூசணி | 100 | 140 | 120 | 150 | 100 | 85 |
| புடோல் | 250 | 250 | 300 | 250 | 250 | 220 |
| வாழைக்காய் | 200 | 180 | 150 | 250 | 150 | 190 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 350 | 150 | 340 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 180 | 180 | -- |
| பாகற்காய் | 600 | 500 | 700 | 600 | 500 | 450 |
| வெண்டக்காய் | 300 | 400 | 300 | 400 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 220 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 800 | 600 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 450 | 450 | 350 |
| பீற்றூட் | 300 | 350 | 600 | 400 | 450 | 400 |
| கறிமிளகாய் | 1000 | 700 | 600 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 600 | 500 | 600 | 400 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 400 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 40-120 | 150 | 120 | -- | 80 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 160 | 150 | 100-150 | -- | 110 |
| இராசவள்ளி | 500 | 450 | 400 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 400 | 450 | 400 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 200 | 200 | 130 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 80 | -- | 70 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 200 | -- | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24 - 09 - 1960

மறைவு
31 - 01 - 2023

கடந்த 31.01.2023 சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவி

**அமரர் திருமதி. நகுலாம்பிகை சச்சிதானந்தமூர்த்தி**
(நகுலா)

திதி:- 28.01.2026

அம்மா!
அடக்கமாய் அழகாய் ஆளுமையாய்
அயர்வின்றி அன்பு கொடுத்தாய்
ஆலமரமாய் எம்மை அணைத்திருந்தாய்
ஆண்டுகள் பல உருண்டாலும்
அழியாது உன் நினைவுகள்
ஆழமாய் எம்முடன்...

மூர்வீதி, மன்னார்.
076 179 8822

தகவல்:-
குடும்பத்தினர்.

(1994)

# 'பசுமை அறிவொளி' நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மாணவர்களை வலுவூட்டும் "பசுமை அறிவொளி" நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக் கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது.



நிகழ்வில் மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வுப் படங்களும், மேற்கோள்களும் பொறிக்கப்பட்டிருந்த அப்பியாசக் கொப்பிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கான நிதி அனுசரணையைக் கனடாவில் இயங்கி வரும் றொறன் ரோவின் மனித நேயக்குரல் அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

## 2026 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் 2027 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை - நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சிற்றுண்டிச்சாலை, வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை, வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.03.2026ஆம் திகதி தொடக்கம் 28.02.2027 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களை 02.02.2026ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 12.02.2026ஆம் திகதி வியாழக்கிழமை வரை அலுவலக நாட்களில் வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரை கீழ்வரும் மீளளிப்பு செய்யப்படாத தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்பு செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| வாகனப் பாதுகாப்பு நிலையம் | 2000.00 | 200,000.00 |
| சிற்றுண்டிச்சாலை | 2500.00 | 300,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 13.02.2026 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 4.00 மணிக்கு முன்னர் நேரடியாக மீளளிப்புத் தொகையினைச் செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். மீளளிப்புத் தொகை பணமாக மட்டுமே செலுத்த முடியும். குறித்த திகதி, நேரத்தின் பின் வழங்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் யாவும் திரு.கணேஸ் விஜயசேகரன், தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி எனும் முகவரியிடப்பட்டு கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் **2026 ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் 2027 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சிற்றுண்டிச்சாலை/வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்** விண்ணப்பம் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சிற்றுண்டிச்சாலை கேள்விப் பத்திரங்கள் 14.02.2026 ஆம் திகதி (சனிக்கிழமை) மு.ப 10.00 மணிக்கும் வாகனப் பாதுகாப்பு நிலைய கேள்விப் பத்திரம் 14.02.2026ஆம் திகதி (சனிக்கிழமை) மு.ப 11.00 மணிக்கும் கேள்வி சபையினதும் சட்டவாளர் முன்னிலையிலும் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் நிச்சயமாக சமூகமளித்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விண்ணப்பதாரி பங்குகொள்ள முடியாதுவிடின் தங்கள் பிரதிநிதியை உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் மூலம் பங்குகொள்ளக்கூடியவாறு அனுப்பி வைக்க முடியும். இவ்விடயம் பற்றி தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது. தங்களால் வழங்கப்படும் மீளளிப்பு தொகையை 03.03.2026 ஆம் திகதி தொடக்கம் 06.03.2026 ஆம் திகதி வரைக்குட்பட்ட காலப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலம் மட்டுமே மீளளிப்புத் தொகை வழங்க முடியும்.

**திரு.க.விஜயசேகரன்,**
**தலைவர்,**
**நோயாளர் நலன்புரிச்சங்கம்.**

(C-4902)

## தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்கான கேள்வி மனுக்கோரல்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலைக்குச் சொந்தமான இரு கடைகளை (துர்க்கை அம்மன் கோவிலுக்கு முன்பாக) வாடகைக்கு வழங்கவுள்ளோம். திறந்த கேள்வி மனுக்கோரலுக்கான முடிவுத்திகதி 20.02.2026 ஆகும். அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:-**
**077 238 0196,**
**076 771 1417**

(C-4901)

**தலைவர்,**
**தெல்லிப்பளை கூட்டுறவு**
**வைத்தியசாலை**

JAFFNA EDUCATION FAIR 2026
Your Future Begins Here...
6th EDITION

யாழ் உயர்கல்விக் கண்காட்சி

JAN 31st FEB 01st 2026 VALAMPURI HOTEL JAFFNA
9.00 am to 5.00 pm
அனுமதி இலவசம்

MEET THE WORLD'S BEST HIGHER EDUCATION PROVIDERS IN JAFFNA

- Foreign Universities
- Local Universities
- Higher Education Institute
- Study Abroad Consulting
- Visa & Migration
- Consultants



HOTLINE : 0773 773 955

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இங்கிலாந்தில் வறுமை உச்சத்தை எட்டியது



(லண்டன்)

இங்கிலாந்தில் மிகக் கடுமையான வறுமை கடந்த முப்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உச்சத்தை எட்டியுள்ளதாக ஜோசப் ரவுண்ட்ரீ அறக் கட்டளை எச்சரித்துள்ளது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 14.2 மில்லியன் மக்கள் வறுமையில் வாடும் நிலையில், அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யமுடியாத மிக மோசமான நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


தற்போதைய அரசு குழந்தைகள் நலனுக்கான கட்டுப்பாடுகளை நீக்கியுள்ள போதிலும், ஒட்டுமொத்த வறுமை விகிதத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்று இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

வறுமை ஒழிப்புத் திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட பிரிவினரை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளதால், ஏனைய எளிய மக்கள் சமூகப் பாதுகாப்பின்றி தவிப்பதாக ஆய்வாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இருப்பினும், ஊதிய உயர்வு மற்றும் மின்சாரக் கட்டணக் குறைப்பு போன்ற நடவடிக்கைகள் மூலம் இந்த நெருக்கடியைக் கையாளப்போவதாக அரசாங்கத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (3)



## உலக ஒழுங்கைச் சிதைக்கு...
## எச்சரிக்கை வி...




(ஒட்டாவா)....
வல்லரசு ...
ஒழுங்கை சிதை...
தெரிவித்துள்ள...

சமீபத்தில் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் பேசிய மார்க் கார்னி, அமெரிக்காவைக் கோடிட்டுக்காட்டி, வல்லரசு நாடுகள் உலக ஒழுங்கைச் சிதைப்பதாகக் குற்றம்சாட்டினார்.

இதற்கு அமெரிக்கா தரப்பிலிருந்து, கனடா தாம் ஆற்றிய உரையைத் திரும்பப் பெறும்படி விடுக்கப்பட்ட தகவலை மறுத்த கனடா பிரதமர் மார்க் கார்னி, "நான் சொன்னவற்றில் இப்போதும் உறுதியாக இருக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

பதிலடியாகப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், "அமெரிக்கா இருப்பதால்தான் கனடா பிழைத்துக் கொண்டிருக்கிறது" என்று காட்டமாகக் கூறியிருந்தார்.


இந்த நிலையில் அமெரிக்க நிதித்துறைச் செயலர் ஸ்கொட் பெசென்ட், "பிரதமர் கார்னி தனது உரையைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகத் தொலைபேசி வாயிலாக ட்ரம்பிடம் மன்னிப்புக் கோரினார்" என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், இதனைத் திட்டவட்டமாக மறுத்துள்ள மார்க் கார்னி டாவோஸில் நான் என்ன பேசினேனோ, அதில் இப்போதும் உறுதியாக இருக்கிறேன் என்பதை ஜனாதிபதி ட்ரம்பிடமே நேரடியாகக் கூறிவிட்டேன்." "ட்ரம்புடன் உக்ரைன், வெனிசுலா மற்றும் ஆர்க்டிக் பாதுகாப்பு குறித்து ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடத்தினேன்." என்று கூறியுள்ளார்.

அதேநேரம் கனடா சீனா

## இந்தியாவில் விமான விபத்து

### மகாராஷ்டிரா துணை முதல்வர் உள்ளிட்ட 6 பேர் உயிரிழப்பு!



(புதுடில்லி)

இந்தியாவில் இடம் பெற்ற விமான விபத்தில் மகாராஷ்டிரா துணை முதல்வரும் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவருமான அஜித் பவார் உயிரிழந்துள்ளார்.

மேலும், விமான விபத்தில் துணை முதல்வர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக விமானத்துறை இயக்கம் அறிவித்துள்ளது.

பாராமதியில் நேற்று நடைபெறவிருந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக துணை முதல்வர் மும்பையிலிருந்து புறப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன்போது மகாராஷ்டிராவின் பாராமதியில் உள்ள ஒரு விமான நிலையத்திற்கு அருகில் விமானம் தரையிறங்க முயன்றபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்து மோதி வெடித்து தீப்பற்றி எரிந்துள்ளது.

குறித்த விபத்து நடந்த இடத்திற்கு பாதுகாப்பு மற்றும் அவசர சேவை குழுக்கள் உடனடியாக அனுப்பப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, முதலமைச்சர் உள்ளிட்ட பல தலைவர்கள் இந்தச் சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை தொடங்கியுள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு அல்லது வானிலை காரணமாக இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்று முதற்கட்ட தகவல்கள் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)



## இந்தியா - ஐரே...
## கையெழுத்தானது...

(புதுடில்லி)

இந்தியா - ஐரோப்பிய ஒன்றியம் இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருப்பதாக இந்தியப் பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

இந்தியா - ஐரோப்பிய ஒன்றியம் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சு, 2007இல் ஆரம்பித்து, 2013 வரை பல சுற்றுகளாக நடைபெற்று வந்தது.


ஆனால், கார்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...கும் வல்லரசு நாடுகள்
## ...விடுத்த கனடா!

**... நாடுகள் உலக ...தெப்பதாக கனடா ...ளது.**



...வுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டால், கனடாப் பொருட்கள் மீது 100 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்படும் என்று ...ட்ரம்ப் குறித்த லாவோஸ் உரையின் பின்னர் மிரட்டல் விடுத்திருந்தார். இதற்குப் பதிலளித்த கார்னி, "கனடா சீனாவுடன் ஒருபோதும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை நாட வில்லை.

அத்துடன் ட்ரம்பின் இந்த வரி மிரட்டல் என்பது வரவிருக்கும் வட அமெரிக்க வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைக்கான ஒரு உத்தி மட்டுமே" என்று குறிப்பிட்டார்.

கனடாவின் கார்னோலா எண் ணெய் மீதான வரியைச் சீனா 85 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைத்துள்ளது.


பதிலுக்கு, சீன மின்சார வாகனங்கள் (EV) மீது கனடா விதித்திருந்த வரியை 6.1% ஆகக் குறைத்துள் ளது.

இதுவே அமெரிக் காவின் அதிருப்திக்கு முக்கிய காரணமா கும்.

அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு பெரும் சக்திகளுக்கு இடையே கனடா தனது பொருளா தார நலன்களைப் பாது காக்கப் போராடி வரு வது சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள் ளது. (3)

## உயிரிழந்த எஜமானருக்கு 4 நாட்கள் காவல்

### நாயின் நெகிழ்ச்சி செயல்



(டில்லி)

நாய்கள் மனிதர்களின் மிகச்சிறந்த நண்பர்கள் என்பதை நிரூபிக்கும் வகை யில், இந்தியாவின் இமாச் சலப் பிரதேசத்தின் சம்பா மாவட்டத்தில் இதயத்தை நெகிழவைக்கும் ஒரு சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

கடும் பனிப்பொழிவு மற் றும் உறைபனிக்கு மத்தி யிலும், உயிரிழந்த தனது எஜமானரின் உடலை விட்டு பிரியாமல் நான்கு நாட்க ளாகக் காவல் காத்துள்ள ஒரு வளர்ப்பு நாய் குறித்து இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இமாச்சலப் பிரதேசத்தின் பார்மூர் பகுதியில் உள்ள பரமணி கோவில் அருகே, பிக்ஷித் ராணா மற்றும் பியூஷ் என்ற இரு இளை ஞர்கள் காணொளி பதிவு செய்ய சென்றபோது மாய மாகினர்.

கடும் பனிப்புயலில் சிக்கிய அவர்கள், பின்னர் உயிரிழந் தமை தெரியவந்தது.

மீட்புக் குழுவினர் மற்றும் கிராம மக்கள் நான்கு நாட் களுக்குப் பிறகு சம்பவ இடத் திற்குச் சென்றபோது, அங்கி ருந்த காட்சி அனைவரை யும் கண்கலங்கச் செய் தது.

பியூஷ் என்பவரின் உடல் பனிக்குள் புதை யுண்டுக் கிடந்தது. ஆனால், அந்த உறைபனியிலும் எவ் வித உணவுமின்றி, அவ ரது வளர்ப்புப் பிராணியான "பிட்புல்" வகை நாய் அவ ரது உடலுக்கு அருகிலேயே அமர்ந்து காவல் காத்துக் கொண்டிருந்தது.

மீட்புக் குழுவினர் பியூ ஷின் உடலை மீட்கச் சென் றபோது, அந்த நாய் அவர் களை நெருங்கவிடாமல் ஆக்ரோஷமாகச் செயற் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எஜமானருக்கு அவர்கள் ஏதோ தீங்கு செய்யப்போவ தாக எண்ணி அது தடுத் தது. பின்னர் நீண்டநேர முயற்சியின் பின்னரும், அன்பான அரவணைப் பிற்குப் பின்னருமே மீட்புக் குழுவினருக்கு அது வழி விட்டது.

உயிரற்ற எஜமானரிட மும் விலங்குகள் காட்டும் இந்த ஈடு இணையற்ற அன்பு மற்றும் விசுவாசம் தற்போது சமூக வலைத்தளங்களில் பலரையும் நெகிழ்ச்சிய டையச் செய்துள்ளது. (3)

## ...ரோப்பிய ஒன்றியம் இடையே ...து தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

...பானங்கள் மீதான இறக் ...தி வரி, தகவல் தொழில் ...ப இந்திய நிறுவனங் ...நக்கான தரவு பாதுகாப்பு, ...றிவுசார் சொத்துரிமை, ...ாழிலாளர் விதிகள் போன்ற ...வகாரங்களில் கருத்து வேறு பாடுகள் ஏற்பட்டதால் பேச்சு வார்த்தை இடைநிறுத்தப்பட்டது.

கடந்த 2022 ஜூனில் மீண்டும் அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு, தற்போது நிறை வடைந்துள்ளது.

இதேவேளை, குடியரசு தின விழாவில் பங்கேற்க சிறப்பு விருந்தினராக இந்தியா சென்றிருந்த ஐரோப்பிய யூனியனின் தலைவர் உர் சுலா வான் டெர் லேயன் மற்றும் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் ஆன்டோனியோ கோஸ்டா ஆகியோர் டில்லி யில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து விரிவாக ஆலோசனை நடந்தது.

பின்னர், இந்தியா - ஐரோ ப்பிய ஒன்றியம் இடையே தடையற்ற வர்த்தக ஒப்ப ந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தம் அனைத்து ஒப்பந்தங்களுக் கும் தாய் என ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர் சுலா வான் டெர் லேயன் இதனை அறிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் பெரும்பாலான பொருட்களுக்கு பரஸ்பர ரீதியாக இருநாடுகளும் இறக்குமதி வரியை நீக்குவதுடன் 2027இல் இருந்து இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரவுள்ளது.


இதேவேளை, இந்த ஒப்பந்தம் குறித்து, சமூக வலைதளத்தில் ஐரோப் பிய ஒன்றிய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் கருத்து வெளியிடுகையில்,

ஐரோப்பாவும் இந்தி யாவும் இன்று வரலாறு படைக்கின்றன.

அனைத்து ஒப்பந்தங்க ளின் தாய் ஒப்பந்தத்தை நாங்கள் நிறைவுசெய்து இருக்கிறோம்.

இரு தரப்பினரும் பய னடைவார்கள். இது ஒரு ஆரம்பம் மட்டுமே. எங் கள் உறவை இன் னும் வலுவாக வளர்ப் போம் என அவர் கூறியுள் ளார். (3)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனில் ரயில் மீது ரஷ்யா தாக்குதல்

## 12 பேர் உயிரிழப்பு



(கீவ்)

உக்ரைன் பயணிகள் ரயில் மீது ரஷ்ய ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் குறைந்தது 12 பேர் உயிரிழந்ததாக கீவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தை உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி பயங்கரவாதச் செயல் என்று கண்டனம் செய்துள்ளார். செவ்வாயன்று உக்ரைனின் வடகிழக்கு கார்கிவ் பகுதியில் 200இற்கும் மேற்பட்டவர்களுடன் சென்ற ரயில் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும், தாக்குதல் குறித்து ரஷ்யா எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. உக்ரைன் பல வருடங்களாக மிகக் கடுமையான குளிர்காலத்தை எதிர்கொண்டுள்ள நிலையில், அந்நாட்டின் எரிசக்தி மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பை குறிவைத்து மொஸ்கோ அண்மைய மாதங்களில் அதன் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

ரஷ்யத் தாக்குதல்களுக்குப் பின்னர், உக்ரைன் முழுவதும் மில்லியன் கணக்கான மக்கள் வெப்பம், மின்சாரம் மற்றும் குடிநீர் இல்லாமல் தவிக்கின்றனர். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் 2022 பெப்ரவரியில் முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கினார். மேலும் மொஸ்கோ தற்போது உக்ரைன் பிரதேசத்தில் சுமார் 20 சதவீதம் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (3)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா-18
உயரம்: 5'9"
தகைமை/தொழில் - A/L, Contract (Building)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16496

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
உயரம்-5'6"
12இல்செவ்
தகைமை/தொழில்- HND in Civil Engineering, Shift Leader (London)
எதிர்பார்ப்பு-உத்தியோகம்
தொ.இ: B/16497

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்-திருவோணம்
கி-பா-9 3/4
உயரம்:5'7"
தகைமை/தொழில் - பட்டதாரி, System Engineer
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: B/16498

பிறப்பு: 1983-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
12இல்செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில் - QS, Business
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16499

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்-ஆயிலியம்
12இல்செவ்
கி-பா- 27 1/2
உயரம்:5'5"
தகைமை/தொழில்: College, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், சைவபோசனம்
தொ.இ: B/16500

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-சுவாதி
கி-பா-18
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc, MBA, Consultant
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/14793

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்-திருவாதிரை
8இல்சூரிசெவ்
கி-பா- 42 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in IT, English
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில் சைவபோசனம்
தொ.இ: G/14726

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-கேட்டை
4ல்சூரிசெவ்
கி-பா-11 1/2
உயரம்-5'5"
தகைமை/தொழில்: BSc, MSc
எதிர்பார்ப்பு: பட்டதாரி, சைவபோசனம்
தொ.இ: G/15057

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா-21
உயரம்: 5'3"
தகைமை/தொழில் - Dip in IT, Free Lancer
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/15371

பிறப்பு-1985 - இந்து
நட்சத்திரம்-பூரட்டாதி
உயரம்: 5'
தகைமை/தொழில்: BCom, Auditor
எதிர்பார்ப்பு - சைவபோசனம்
தொ.இ: G/15361

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 531



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இடம் எதுவானாலும்...

ஒரு ஆபீஸிலே இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். "என்ன இது? நேற்று வரைக்கும் இவர் நம்கூட சகஜமாக பேசிப் பழகிக் கொண்டிருந்தார். இன்றைக்கு நம்மைப் பார்த்துவிட்டும் பார்க்காதது மாதிரி போகிறாரே!" என்றார் ஒருவர்.

"ஒன்றுமில்லை அவருக்குப் பதவி உயர்வு வந்துவிட்டது. அதனாலே நம்மிடம் நின்று பேசினால் அது அவருக்குக் கௌரவக் குறைச்சல் என்று நினைக்கிறார். அதுதான் அப்படி போகிறார்!" என்றார் இன்னொருவர். சராசரி மனிதன் இது மாதிரி சபலங்களுக்கு ஆளாகுவது சகஜம்! ஆனால் சில பேர் இப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகுவதில்லை! அது ரொம்ப அபூர்வம். இஸ்ரேல் தேசத்துக் கதை ஒன்று உண்டு!

ஒரு காலத்தில் அந்த நாட்டிலே அரசனைத் தேர்ந்தெடுக்கிறது தெய்வத்துடைய செயலாக இருந்ததாம். ஒரு விசித்திரமான பறவை ஒன்று உண்டாம். அதற்கு "சந்தோஷப் பறவை" என்று பெயராம்.

ஏற்கனவே இருக்கின்ற ராஜா இறந்துபோனால் உடனே அந்தப் பறவை வானவெளியிலிருந்து பறந்து வருமாம். அப்படி அது பறந்து வந்து யார் தலையிலே முதலிலே உட்காருதோ, அவர்தான் அந்த நாட்டுக்கு ராஜாவாம்! இது அங்கே வழக்கம். ஒரு சமயம் ராஜா இறந்து போனார். எல்லோரும் ஆகாயத்தைப் பார்த்தார்கள். சந்தோஷப் பறவை பறந்து வந்தது.

யார் தலையிலே அது உட்காரப் போகிறதோ என்று எல்லாரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பறவை நேராகப் பறந்து வந்து அங்கே நின்றுக்கொண்டிருந்த ஒரு அடிமையின் தலையிலே உட்கார்ந்து விட்டது. அந்த அடிமை எந்தக் கோலத்திலே இருந்தான் தெரியுமா?

தோளிலே மத்தளம், இடுப்பிலே ஆட்டுத் தோல், நிலையிலே இறகுகள் வைத்த தொப்பி! வீடுகளிலே ஏதாவது விசேஷம் என்றால் ஆடிப் பாடுகிறவன் அவன். யாராக இருந்தால் என்ன? சந்தோஷப் பறவை உட்கார்ந்தால் உட்கார்ந்தது தானே! அந்த அடிமையை உடனே அந்த நாட்டு மக்கள் ராஜாவாக ஏற்றுக்கொண்டார்கள். அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோய் அரியணையிலே உட்கார வைத்தார்கள்! அந்த அடிமை ராஜா என்ன செய்தான் தெரியுமா? அரண்மனைக்குப் பக்கத்திலேயே ஒரு சின்னக் குடிசை கட்டச் சொன்னான். அந்தக் குடிசைக்குள்ளே தன்னிடம் இருந்த மத்தளம், ஆட்டுத்தோல் உடை, தொப்பி எல்லாவற்றையும் பத்திரமாக வைத்தான். அதற்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய நிலைக் கண்ணாடியையும் வைத்தான்!

இவன் இப்படிச் செய்வதைப் பார்த்ததும் அங்கே இருந்த அமைச்சர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்! இருந்தாலும் யோசனை செய்தார்கள். ஒரு தேசத்துக்கு ராஜாவாக இருக்கிறவர் இப்படியெல்லாம் செய்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை! அதனாலே அவர்களெல்லாம் சேர்ந்து ராஜாவிடம் போனார்கள். மெதுவாக சொன்னார்கள். "அரசே! நீங்கள் தனியாக இருக்கும்போதுகூட உங்களுடைய ராஜ கௌரவத்தை நன்றாய் காப்பாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்!" என்று ஆலோசனை சொன்னார்கள். அதற்கு அந்த அரசன் சொன்னான்:

"அரசனாவதற்கு முதல் நான் ஓர் அடிமையாகத்தான் இருந்தேன்! இப்பவும் அடிக்கடி அதை நினைவுபடுத்துகிறேன்! அப்போதுதான் உங்களையும் மற்றவர்களையும்விட நான் உயர்ந்தவன் அல்ல என்பது எனக்கு உறைக்கும். மனதிலேயும் அகங்காரம் உண்டாகாது!" என்றாராம் அந்த அரசன். இது இஸ்ரேல் தேசத்துக் கதை! அதனாலே நம்முடைய நாற்காலிகள் மாறலாம்! அதற்காக. நம்முடைய பண்பு மாறிவிடக்கூடாது! மனிதர்களுக்கு இடையே இருக்க வேண்டிய மரியாதை குறைந்துவிடக் கூடாது! ஒரு ஆபீஸ்! அதிலே ஒரு பெரிய அதிகாரி.

அவர்தான் டைரக்டர்! அவருக்குக் கீழே உதவி டைரக்டர் அதற்குக் கீழே மேனேஜர் - கிளார்க் - பியூன் இப்படி எல்லோரும் இருக்கிறார்கள். அந்த டைரக்டர் எப்படி என்றால் அவருக்கு அடுத்தபடியாக இருக்கின்ற உதவி டைரக்டரிடம்தான் பேசுவார். அதற்குக் கீழே இருக்கிறவர்களிடம் முகம்கொடுத்துப் பேசமாட்டார்!

யாரும் அவரை நேரடியாகச் சந்திக்க முடியாது எதுவாக இருந்தாலும் Through proper channel என்பார். உதவி டைரக்டரிடம் நீங்கள் பேசுங்கள் அவர்தான் எங்களிடம் பேச வேண்டும் என்பார். அவர்தான் எங்களிடம் வரவேண்டும் என்பார். அப்படி ஒரு சுபாவம்.

அப்பேற்பட்ட டைரக்டர் ஒருநாள் ஆபீஸ் வாசலிலே ஒரு காரிலே அடிபட்டுக் கிடக்கின்றார். வாசலிலே நின்றுகொண்டிருந்த பியூன் இதைப் பார்த்து விடுகிறார். "ஐயோ... நம் தலைமை அதிகாரி அடிபட்டுக் கிடக்கின்றாரே" என்று தூக்க ஓடினார். இதைப் பார்த்ததும் அந்த டைரக்டர் "நோ!" என்று கத்தினார். "நீ வராதே ஓடிப்போய் உதவி டைரக்டரை வரச்சொல்லு!" என்று உத்தரவு போட்டார். இது எப்படி இருக்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டேவிற் பீரிஸ் குழுமத்தின் பல்-பயனர் களஞ்சியசாலை திறப்பு








டேவிற் பீரிஸ் குழுமத்தின் விநியோகத்தீர்வுப் பிரிவான David pieris Logistics (private) Limited இன் முதலாவது பல்-பயனர் விநியோகத் தீர்வு வளாகத் திறப்பு விழா நேற்றுப் புதன்கிழமை காங்கேசன்துறை மயிலிட்டிப் பகுதியில் நடைபெற்றது.

விரிவாக்கம் செய்யக்கூடிய, பல்-பயனர் மூன்றாம் தரப்பு விநியோகத் தீர்வு மையமாக வடிவமைக்கப்பட்டுள்ள இவ்வளாகம், வேகமாக நகரும் நுகர்வோர் பொருட்கள் சில்லறை வணிகம், விவசாயம் மற்றும் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறுபட்ட தொழில் துறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இது களஞ்சியப்படுத்தல், சேமிப்பு, மூலப்பொருள் கையாளுதல், பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் மற்றும் பிராந்திய விநியோகம் போன்ற முழுமையான சேவைகளை வழங்குகின்றது.

இதன்மூலம், பல்வேறு அளவிலான வணிக நிறுவனங்கள், நம்பகமான மற்றும் செலவு குறைந்த விநியோகத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள வழியமைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை புகையிரத நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி சர்வதேச விமான நிலையம் போன்ற முக்கிய போக்குவரத்து மையங்களுக்கு மிக அருகாமையில் இவ்வாளகம் மூலோபாய ரீதியாக அமையப்பெற்றுள்ளது. இதன்மூலம் வான், கடல் மற்றும் தரை வழி போக்குவரத்து வலையமைப்புகளுக்கு இடையிலான தடையற்ற இணைப்பை இது உறுதிப்படுத்துகின்றது.

## தைப்பூச மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி ஆலய தைப்பூச மஞ்சத் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து இணுவில் கந்தசுவாமி ஆலயத்தை நோக்கிய பாற்குடப்பவனி காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை பாரம்பரிய பொங்கல் நடைபெற்று இரவு 6 மணிக்கு வசந்த மண்டபபூஜையை தொடர்ந்து உலகப் பெரு மஞ்சப் பவனியும் இடம்பெறவுள்ளது. (3)



40 ஆண்டு கால அரச சேவையிலிருந்து இளைப்பாறும் நிர்வாக உத்தியோகத்தர் ஆறுமுகம் சத்தியமூர்த்திக்கான சேவைநலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

1986 ஆம் ஆண்டு தொடக்கம் அரச சேவையில் இணைந்து, மாவட்டச் செயலகத்தில் பல்வேறு காலகட்டங்களில் கடமையாற்றியதுடன், இறுதியாக கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி தொடக்கம் ஓய்வு பெறும் வரை நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி தமது 40 வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேசசெயலர் சத்தியசோதியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அர்ச்சுனா இராமநாதன், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ், பிரதேசசபைத் தவிசாளர் குகதாசன், நகர,பிரதேச சபைகளின் உப தவிசாளர்கள், உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம்,கல்வி, உள்ளூராட்சி, வீடமைப்பு உள்ளிட்ட விடயதானங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. (8-30)

## இராசிபலன்

29.01.2026
தை 15, வியாழக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 12.29 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 4.36 மணிவரை

சுபநேரம் 8.06-9.36 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36 மணிவரை
பீம ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்-
விசாகம்

வளவன்




எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.




கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், வரவும் செலவும் சமமாகும் நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.




உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும்,பிள்ளைகளால் பெருமையுண்டு.




எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதியான நாள்.




செய் தொழிலில் ஆதாயம் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வீட்டை பராமரிக்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வரலாம்.




தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.




நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்

பொறுமையை எங்கு கைவிடுகிறோமோ அங்கு பலாத்காரம் உருவெடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 966





"வல்லவரையா! ஒரு சாம் ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்காக ஓர் உயிரைக் கொல்லுவது குற்றமா? அவள் பெண்ணாயிருந்தால் என்ன? என் உடன் பிறந்த சகோதரியாக இருந்தால் தான் என்ன? உண்மையில் அவள் பெண் அல்ல.

பெண் உருக்கொண்ட மாயமோகினிப் பேய்! அவளை உயிரோடு விட்டு வைத்தால் விஜயாலய சோழர் காலத்திலிருந்து பல்கிப் பெருகி வந்திருக்கும் இந்தச் சோழ சாம்ராஜ்யம் சின்னா பின்னமாகிவிடும். ஆகா! அது என்ன?" என்று ஆதித்த கரிகாலன் திகிலுடன் கேட்டு விட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அச்சமயம் அவர்கள் இருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் காட்டுப் புதர்களுக்கு மத்தியில் ஏதோ அல்லோல கல்லோலம் நடந்து கொண்டிருந்தது. இருவரும் குதிரைகளைத் தட்டிவிட்டு அருகில் சென்று பார்த்தார்கள்.

மிக அபூர்வமான காட்சி ஒன்று தென்பட்டது. காட்டுப்பன்றி ஒன்றும், சிறுத்தைப் புலி ஒன்றும் கொடூரமாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

"ஆகா! நாம் தேடி வந்தவன் இங்கே இருக்கிறான்!" என்றான் கரிகாலன்.

"சிறுத்தை நமக்கு வேலை இல்லாமல் செய்து விடும் போலிருக்கிறது!" என்றான் வந்தியத்தேவன்.

"அப்படியா நினைக்கிறாய்? பார்த்துக் கொண்டே இரு!" என்றான் கரிகாலன்.

சிறுத்தைக்கும் பன்றிக்கும் நடந்த அகோரமான யுத்தத்தை இருவரும் சிறிது நேரம் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறுத்தை பன்றியின் மீது பாய்ந்து அதை நகங்களினாலும் பற்களினாலும் தாக்க முயன்றது. ஆனால் காட்டுப்பன்றியின் கடினமான தோல், புலி நகத்திற்கும் பற்களுக்கும் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. ஆனால் பன்றி வேகமாக ஓடி வந்து சிறுத்தையை முட்டித் தள்ளித் தரையிலும் மரங்களின் வேர்களிலும் வைத்துத் தேய்த்த போதெல்லாம் சிறுத்தை படாதபாடு பட்டது. பன்றியின் கோரைப் பற்கள் சிறுத்தையின் தோலைச் சின்னா பின்னமாகக் கிழித்தன. கடைசியாக ஒரு முறை சிறுத்தையைப் பன்றி கீழே முட்டித் தள்ளியபோது அது செத்தது போலக் கிடந்தது.

"தம்பி! சிறுத்தை செத்து விட்டது! பன்றி இனி நம் பேரில் திரும்பும்! அதற்கு நாம் ஆயத்தமாக வேண்டும்!" என்று கூறிக் கரிகாலன் வில்லில் அம்பைப் பூட்டி, விட்டான்.

அம்பு பன்றியின் கழுத்தில் போய்த் தைத்தது.

பன்றி கழுத்தை உதறிக் கொண்டே திரும்பிப் பார்த்தது. இரு குதிரைகளையும் அவற்றின் மீதிருந்தவர்களையும் ஒரு கணம் கவனித்தது. பிறகு ஒரு தடவை சிறுத்தையைப் பார்த்தது.


அதனால் இனி ஒன்றும் ஆகாது என்று தெரிந்து கொண்டது போலும்! மூர்க்க ஆவேசத்துடன் குதிரைகளை நோக்கிப் பாய்ந்து வந்தது. கரிகாலன் இன்னொரு அம்பை வில்லில் பூட்டுவதற்கு முன்னால் அவன் ஏறியிருந்த குதிரையைத் தாக்கியது. தாக்குதலின் வேகத்தினால் சிறிது நகர்ந்த குதிரையின் பின்னங்கால் ஒரு மரத்தின் வேரில் அகப்பட்டுக் கொள்ளவே குதிரை தடுமாறிக் கீழே விழுந்தது. குதிரையின் அடியில்கரி காலன் அகப்பட்டுக் கொண்டான். பன்றி சிறிது பின்னால் நகர்ந்து வந்து மறுபடியும் தரையில் கிடந்த குதிரையை நோக்கிப் பாய்ந்து சென்றது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வேண்டாம் வேறுவழி



சீன நாட்டுச் சிற்றூர் வழியாகப் பெரியவர் ஒருவர் வந்துகொண்டு இருந்தார். அங்கே வயல் வெளியில் ஒரு முதியவரும் இளைஞனும் உடலெங்கும் வியர்வை சொட்டக் கிணற்றிலிருந்து நிலத்திற்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டு இருந்தனர்.

இதைக் கண்ட பெரியவர் நேராக அந்த முதியவரிடம் சென்று, ஏன் இப்படித் துன்பப் படுகின்றீர்கள்? நீங்கள் செய்யும் இந்த வேலையை நகரத்தில் மாடுகளைக் கொண்டு எளிதாகச் செய்கிறார்கள். இது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

உடனே அந்த முதியவர் மெதுவாகப் பேசுங்கள், என் மகன் காதில் விழுந்துவிடப் போகிறது. அவன் இன்னும் சிறிது நேரத்தில் உண்பதற்காக வீட்டிற்குச் சென்று விடுவான். அதன் பிறகு வாருங்கள். பேசுவோம் என்றார்.

பெரியவர் இதைக் கேட்டு வியப்பு அடைந்தார். முதியவரின் மகன் சென்ற பிறகு அவரிடம் வந்து, "நான் சொன்னது உங்கள் மகனுக்குத் தெரியக் கூடாது என்று ஏன் நினைக்கிறீர்கள்? உங்கள் இருவரின் நன்மைக்காகத்தானே நான் இதைச் சொன்னேன்" என்றார்.

அதற்கு அவர், "ஐயா! எனக்கு இப்பொழுது எண்பது வயதாகிறது. என் முப்பது வயது மகனுக்குத் துணையாக வயலில் இறங்கி வேலை செய்ய என் உடலில் இன்னும் வலிமை இருக்கிறது. வயலில் நாங்கள் இருவரும் வேலை செய்வதற்குப் பதில் மாடுகளைப் பயன்படுத்தலாம். எனக்கும் அது தெரியும். அப்படிச் செய்தால் என் மகனுக்கு எண்பது வயதாகும் போது அவன் என்னைப் போல் வலிமை உடையவனாக இருக்கமாட்டான்.

அதனால் உங்களை மீண்டும் வேண்டுகிறேன். என் மகனின் எதிரில் தயவு செய்து இதைப் பற்றிப் பேசாதீர்கள். எல்லாவற்றையும் விட அவன் உடல் நலம் எனக்கு மிக இன்றியமையாதது என்று விளக்கம் தந்தார்.

இதைக் கேட்ட பெரியவர். "என்னை மன்னியுங்கள்" என்று சொல்லி விடை பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது, ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது. ~ அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கின் ஆளுநருக்கு ஓர் அவசர கடிதம்

வடக்கு மாகாண ஆளுநர் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

ஒட்டுமொத்த மக்களின் நன்மை கருதி இக் கடிதத்தை தங்களுக்கு அவசரமாக எழுதுகின்றோம்.

அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் டித்வா புயல் காரணமாக பல்வேறு அனர்த்தங்கள் நாடு முழுமையிலும் நடந்தமை அனைவரும் அறிந்ததே.

இயற்கை அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய சேதங்களை நிவர்த்திக்கும்போதுதான் பாதிப்புக்களை கணிசமாகக் குறைக்க முடியும்.

அந்த வகையில் நம் வட மாகாணத்தில் பெய்த கடும் மழை காரணமாக வீதிகள் பலத்த பாதிப்புக்கு ஆளாகின்ற அபாய நிலையில் உள்ளன.

ஆம், மழை வெள்ளம் அடித்துச் சென்றதன் காரணமாக, புதிததாக அமைக்கப்பட்ட நெடுஞ்சாலை காபற் வீதிகள் உட்பட அனைத்து வீதிகளின் ஓரங்களிலும் உள்ள மண், கல், புல் என்பன அள்ளிச் செல்லப்பட்டன. இதனால், வீதிகளின் ஓரங்கள் மண் அணையோ அன்றி கல் அணையோ இன்றிக் காணப்படுகின்றன.

நிலைமை இதுவாக இருக்கும்போது, கனரக வாகனங்கள் குறித்த வீதியின் ஓரமாகச் செல்லுமாயின் அந்த வீதி உடைந்து போவது உறுதி.

இவ்வாறு உடைவு ஏற்பட்டு விட்டால், பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அந்த வீதி முழுமையும் சேதமடையும்.

தற்போது நல்லூர் அரசடி வீதி, நல்லூர் செம்மணி வீதி போன்றவை சேதமடைய ஆரம்பித்துவிட்டன.

கனரக வாகனங்களின் பயணங்களுக்கேற்றதாகக் குறித்த வீதிகள் அமைக்கப்படாமையினால் அந்த வீதிகள் இடையிடையே நெருசல் பட்டு உடைவு ஏற்பட்டுள்ளன.

உண்மையில் யுத்தத்துக்குப் பின்னர் எங்கள் வட மாகாணத்துக்குக் கிடைத்த ஒரேயொரு நன்மை என்றால் அது வீதிப் புனரமைப்பாக மட்டுமே இருக்க முடியும்.

எனினும் குறித்த வீதிகளை உரியவாறு பராமரிக்காது விடுகின்றபோது, அத்தனை வீதிகளும் சேதமடைவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆகையால் வட மாகாணத்தில் உள்ள அத்தனை வீதிகளையும் பராமரிக்கின்ற விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்தி வீதிகளின் ஓரங்களை மீளச் செப்பனிட்டு வீதிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுவிடயத்தில் தாங்கள் விசேட கவனம் செலுத்தி மேலே குறிப்பிட்ட வீதி சம்பந்தமான அமைப்புக்களுடன் கலந்துரையாடி விசேட குழுக்களை நியமித்து எங்கெல்லாம் வீதி ஓரங்கள் செப்பனிடப்பட வேண்டுமோ அல்லது வீதிகளில் இடையிடையே ஏற்பட்ட வெடிப்புகள் சீராக்கப்பட வேண்டுமோ அவற்றையெல்லாம் உடன் செய்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் இக் கடிதம் மூலம் தங்களிடம் நாம் முன்வைக்கும் கோரிக்கை.

# பேரிடருக்குப் பின்னர் நாடு மீண்டெழுகையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வேண்டுகோள்

டித்வா சூறாவளி பேரிடருக்குப் பின்னர் நாடு மீண்டெழுந்து வரும் நிலையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதன்மூலம் சிரமங்களை ஏற்படுத்த வேண்டாமென வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களிடம் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் (27) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்க மருத்துவர்கள் சங்கத்தின் மிகச் சிறிய குழுவினர் பல் வேறு நோக்கங்களுக்காக மேற்கொள்ளும் வேலைநிறுத்தங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் அனைத்து மருத்துவர்களும் இணைய வேண்டாம் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மருத்துவர்கள் உட்பட நாட்டின் அனைத்து அரச ஊழியர்களுக்கும் இந்த மாதம் அடிப்படைச் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இதற்காக இந்த ஆண்டு மட்டும் 220 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் கூறினார். (ம-7)

# போதைப்பொருள் பழக்கம் மாணவர்களிடையே அதிகரிப்பு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

போதைப்பொருள் பழக்கம் மாணவர்களிடையே அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ.வுட்லர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்நிலையில் பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் புழக்கம் அதிகரித்து வருவது குறித்தும் பொலிஸார் மிகுந்த கவனம் செலுத்தி வருவதாகவும் குளிர்பானம், பஞ்சு மிட்டாய், ரொபி, பிஸ்கட் போன்றவற்றைப் பயன்படுத்தி பாடசாலைகளில் மாவா மற்றும் பாபுல் போன்ற போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றமை தெரிய வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

இது தொடர்பில் ஏற்கெனவே 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அதன்படி 05 கிராமுக்கு மேல் கொக்கேன், ஐஸ் மற்றும் ஹெரோயின் வைத்திருப்பது மரண தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் 4 தேரர்கள் உட்பட 9 பேருக்கு மறியல்

(திருகோணமலை)

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பில் 4 தேரர்கள் உட்பட 9 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிவான் எம்.என்.எம்.சம்சுதீன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏற்கெனவே ஜனவரி 19ஆம்திகதி ஆஜர்படுத்தப்பட்டபோது நேற்று (28) வரை விளக்கமறியல் விதிக்கப்பட்டிருந்தது. நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்த நிலையில் சந்தேகநபர்களின் பிணைக்கோரிக்கையை நிராகரித்த நீதிபதி, விளக்கமறியலை நீட்டித்து உத்தரவிட்டார்.

மேலும் வழக்கு பெப்ரவரி 2 ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025 நவம்பர் 16 ஆம் திகதி திருகோணமலை நகரின் கடற்கரை ஓரத்தில் ஒரு குழுவினருடன் இணைந்த பௌத்த பிக்குகள் விகாரை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டி புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்தனர்.

குறித்த பகுதி கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமானது.

கட்டுமானத்திற்கு நகரசபை அல்லது திணைக்களத்திடம் எவ்வித சட்டபூர்வ அனுமதியும் பெறப்படவில்லை.

இதனால் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் பாதிக்கப்படுவதாக சிவில் அமைப்புகள் குற்றஞ்சாட்டின.

வழக்கு விசாரணையை ஒட்டி திருகோணமலை நகரம் முழுவதும் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். (ம-7)

## ரணிலின் செயலாளர்

# சமன் ஏக்கநாயக்க விளக்கமறியலில்

முன்னாள் ஜனாதிபதி ரணிலின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் பயணம் தொடர்பாக விசாரிக்கப்பட்டு வரும் வழக்கில் வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் நேற்று (28) கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

விசாரணைகளின் பின்னர் நீதிவான் விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் முன்னிலையாவதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார். (ம-7)

## கொழும்பு அங்குலானையில்

# 24 வயது இளம்பெண் அடித்துக் கொலை

(கொழும்பு)

கொழும்பு அங்குலானைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 24 வயதுடைய பெண் ஒருவர் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சயுர புர அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

முதற்கட்ட விசாரணைகளின்படி திருமணத்திற்கு புறம்பான தொடர்புடைய நபருடன் பெண்ணுக்கு ஏற்பட்ட தகராறு காரணமாக அவர் மீது தாக்குதல் நடந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில்மேலதிக விசாரணைகளை அங்குலானைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 09

என்.சொக்கன்

வசனம் பேசியிருக்கிறது சிஐஏ. இந்த முயற்சியும் பலிக்கவில்லை. விஷம் ஏந்தியவர்களைப் போலவே, காஸ்ட்ரோவுக்கு எதிராகத் துப்பாக்கி ஏந்தியவர்களையும் சுற்றி வளைத்துப் பிடித்துவிட்டது க்யூபாவின் உளவுத்துறை.

இத்தனையிலும் ஃபிடல் காஸ்ட்ரோ தப்பிப் பிழைத்தபிறகு, சிஐஏவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இனிமேல் இவர் வயதாகி இயற்கைமுறையில் தானாக இறந்தால்தான் உண்டு என்று கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து விட்டார்கள்.

காஸ்ட்ரோ விஷயத்தில், சிஐஏ தொட்டதெல்லாம் சொதப்பல். ஆரம்பத்தில் அவருடைய ஆட்சியைக் கவிழ்க்க நினைத்தவர்கள், அதிலும் பரிதாபமாகத் தோல்வியைத் தழுவினார்கள்.

சிஐஏவின் மிகப் பெரிய தப்புக் கணக்கு அது. மற்ற நாடுகளில் நடத்திய அதே நாடகத்தை, க்யூபாவிலும் நடத்திவிடலாம், காஸ்ட்ரோவைக் கீழே தள்ளிவிட்டு, தங்களுக்குச் சாதகமான ஒரு தலையாட்டி பொம்மையை ஆட்சியாளராக உட்காரவைத்துவிடலாம் என்று நினைத்து, யோசிக்காமல் தீவிர நடவடிக்கைகளில் இறங்கி விட்டார்கள்.

பலமுறை வெற்றியடைந்த அவர்களுடைய திட்டம், க்யூபாவில் படுதோல்வியடையக் காரணம், காஸ்ட்ரோவுக்கு மக்கள் மத்தியில் இருந்த ஆதரவு. அதைச் சரியாகக் கணிக்கத் தவறிவிட்டன அமெரிக்காவும் சிஐஏவும்.

அமெரிக்கர்களைப் பொறுத்தவரை, மொத்த உலகமும் அவர்களைப் போல்தான் சிந்திக்கிறார்கள் என்றுதான் நினைப்பார்கள், அப்படிச் சிந்திக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அவர்களால் வேறெப்படியும் இருக்கமுடியாது.

எங்களுக்கு கம்யூனிஸம் பிடிக்காது. அப்படியானால், உலகின் எல்லா மூலைகளிலும் யாருக்கும் கம்யூனிஸம் பிடிக்காது என்றுதான் அர்த்தம். எங்களுக்குப் பிடிக்காத கொள்கைகளின்படி ஆட்சி நடத்துபவர்கள், அகற்றப்படவேண்டியவர்கள். அவ்வளவுதான் விடயம்.

அமெரிக்காவின் இந்தப் பிடிவாதம், க்யூபாவில் பலிக்கவில்லை. அவர்கள் காஸ்ட்ரோவைத் தங்களுடைய உண்மையான மக்கள் தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அது புரியாமல், அங்கேயும் குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கலாம் என்று தூண்டிலுடன் கிளம்பியது சிஐஏ.

அப்போதைய அமெரிக்க அதிபர் கென்னடி (John F Kennedy). அவருடைய பூரண ஆசிர்வாதத்துடன்தான் சிஐஏ க்யூபாவில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்தது.

அவர்களுக்கு காஸ்ட்ரோ ஆட்சி மீது இருந்த கோபத்தில், நேரடியாக ஆயுதத் தாக்குதல் நடத்திவிடலாம்



என்றுதான் முதலில் நினைத்தார்கள். அப்படிச் செய்தால் உலக அரங்கில் அமெரிக்காவின் பெயர் கெட்டுப் போகும். அதற்குப்பதிலாக, எப்போதும் போல் பின் வழியாகவே நுழைந்து விடலாம் என்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

அவர்களுடைய திட்டத்தில் பெரிதாக எந்த மாற்றமும் இல்லை - காஸ்ட்ரோமீது வெறுப்புக் கொண்ட அல்லது அவருடைய ஆட்சியைக் கவிழ்த்துவிட்டுத் தாங்கள் அதிகாரங்களைக் கைப்பற்ற விரும்பும் சில உள்ளூர் அமைப்புகளை அடையாளம் காண்பது. அவர்கள் எல்லோரையும் ஒன்றாகத் திரட்டி, அவர்களுக்குச் சகல உதவி களையும் செய்து தந்து, ஒரு கல கத்தைத் தூண்டுவது.

காஸ்ட்ரோவுக்கு எதிரான கலகக்காரர்கள் தங்கள் தாக்குதலைத் தொடங்குவதற்கு, பிக் வளைகுடா (Bay Of Pigs) என்ற பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர் இந்தத் திட்டத்துக்கும் "பிக் வளைகுடா ஆக்கிரமிப்பு" என்றே பெயர் சூட்டப்பட்டது.

வழக்கம்போல், இந்தமுறையும் சிஐஏவுக்கு உதவியாகச் சில கலகக்காரர்கள் கிடைத்தார்கள். அவர்களுக்குத் தாராளமாகப் பண உதவி, ஆயுதங்கள், போர்ப்பயிற்சி என்று வேண்டியதையெல்லாம் கொடுத்துத் தயார் செய்தார்கள். நெற்றியில் குங்குமம் தீற்றி, "சென்று வா, மகனே, வென்று வா" என்று க்யூபாவுக்கு வழியனுப்பிவைத்தார்கள்.

முக்கியமான விடயம், சிஐஏ அவர்களைத் தனியே அனுப்பவில்லை. முன்பாரம், பின்பாரமாக, போர்க் கப்பல்கள், விமானங்கள் என்று எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். வெறும் உள்ளூர்க் கலவரங்களைமட்டும் நம்பாமல், க்யூபாமீது மிகப் பெரிய தாக்குதலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போர்க் கப்பல்கள், விமானங்களில் உட்கார்ந்துகொண்டு குண்டு வீசத் தயாராக இருந்தவர்கள் எல்லாம் அமெரிக்கர்கள்தான். ஆனால், அதை வெளியே சொல்லாமல், க்யூபர்களின் கலகம் என்று பூசி மறைத்துவிடத் திட்டமிட்டிருந்தார்கள்.

அதாவது, காஸ்ட்ரோவுக்கு எதிராக உள்ளூர் க்யூபர்கள் புரட்சி பண்ணுகிறார்கள், அவர்களே காஸ்ட்ரோவின் இராணுவத்தைத் தாக்குகிறார்கள், அவரை வீழ்த்தி, நாட்டைவிட்டு (அல்லது உலகத்தை விட்டே) அனுப்பப்போகிறார்கள், இதற்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை, ஓம் சாந்தி ஓம்!

அமெரிக்கா, சிஐஏவின் இந்த வேஷமும் சரி, கனவும் சரி, மிக விரைவில் கலைந்துபோய் விட்டது. இதற்குமுன் பலமுறை அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றிய திரைக்கதை, க்யூபாவில்மட்டும் படுமோசமாகச் சொதப்பிவிட்டது. சிஐஏ ஆவலுடன் எதிர்பார்த்த அந்த "உள்ளூர்க் கலவரம்", கடைசிவரை நடக்கவே இல்லை.

ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு எதிராக அவர்கள் அனுப்பிவைத்த கலகக்காரர்கள், க்யூபாவின் சாதாரணப் பொதுமக்களிடம் சிக்கிக்கொண்டு உதைபட்டார்கள். "காஸ்ட்ரோவுக்கு எதிராக நாங்கள் ..." என்று அவர்கள் பேசத் தொடங்குமுன், மக்கள் அவர்களைப் பிடித்துக் கொண்டு போய் காவல்துறையிடம் ஒப்படைத்து விட்டார்கள். எந்த நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி சிஐஏவுக்கு எந்த அக்கறையும் கிடையாது. பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக் கவிழ்ப்பது அவர்களுக்கு அப்படியொன்றும் கஷ்டமான விடயம் இல்லை.

ஆனால் க்யூபர்களிடையே, சிஐஏ நினைத்துப்பார்க்கமுடியாத அளவுக்கு ஒற்றுமை தெரிந்தது. காஸ்ட்ரோவை அவர்கள் முழுமையாக நம்பினார்கள், அவருக்கு எதிராகச் செயல்படுவது அந்தக் கடவுளே ஆனாலும் சரி, "அவரைப் பிடித்து உள்ளே போடு" என்று கத்தினார்கள். இந்த விடயத்தில் அவர்களைப் பிரித்தாளுவது சாத்தியமே இல்லை என்று சிஐஏ கொஞ்சம் தாமதமாகதான் புரிந்துகொண்டது.

அதற்குள், நிலைமை எல்லை மீறிவிட்டது. கலவரம் தொடங்கும், இடையில் புகுந்து நாமும் நாலு தர்ம அடி கொடுக்கலாம் என்று காத்திருந்த அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

"ஐயையோ, நம் ஆள்கள் அடி வாங்குகிறார்களே" என்று கென்னடியோ சிஐஏவோ கூடுதல் படைகளை க்யூபாவுக்கு அனுப்பிவைக்க முடியவில்லை. இந்த விடயத்தில் அவர்களால் பகிரங்கமாக எதையும் செய்யமுடியாது என்பதால், திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் விழித்தார்கள்.

ஃபிடல் காஸ்ட்ரோவின் நேரடி வழிநடத்துதலில், கலகம் ஒடுக்கப்பட்டது. அமெரிக்கா அனுப்பிவைத்த கலகக்காரர்களில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டார்கள். மிச்ச மிருந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இந்த விடயத்தில், கென்னடி அரசின் நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிய தீர்வு...

குறித்து ஆராய்ந்தது.

இதன்போது, எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் சங்கத்தின் நிறைவேற்றுச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் மருத்துவமனைகளில் கையிருப்பில் இல்லாத மருந்துகளை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்வதற்கு அல்லது தனியார் மருந்தகங்களில் வாங்குவதற்கு பரிந்துரைக்கும் மருந்துச் சீட்டுகளை எழுதும் நடைமுறை தொடர்ந்து நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் குழுக்களினால் ஏற்பாடு செய்யப்படும் எந்தவொரு சுகாதார முகாம்களிலும் மருத்துவர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்ற தீர்மானமும் நேற்று எடுக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் ஆக்கபூர்வமான தலையீட்டை வழங்கத் தவறினால், மருத்துவ சேவைகள் மேலும் பாதிக்கப்படக்கூடிய வகையில் கடும் தீர்மானங்கள் எடுக்கப்படும் என சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## ஒட்டுசுட்டானில்...

தாக்கப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் இருந்த சடலம், நேற்று (28) முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்று பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

அதில் தலையில் ஏற்பட்ட கடும் தாக்கத்தின் காரணமாக வெளியேறிய அதிக இரத்தக்கசிவே உயிரிழப்பிற்குக் காரணம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

## சொந்த இடத்தில்...

காலப்பகுதியில் காங்கேசன்துறை பகுதி மக்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேறிய நிலையில் சுமார் 28 வருடங்களுக்கு மேலாக அப்பகுதியில் மக்கள் மீள் குடியேற அனுமதிக்காது உயர் பாதுகாப்பு வலயமாக குறித்த பிரதேசம் பிரகடனப்படுத்தப்பட்டது.

பின்னரான காலப்பகுதியில் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட நிலையில், வலி.வடக்குப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட காங்கேசன்துறை பொதுச்சந்தையை மீள சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கான கட்டடங்கள் கட்டப்பட்டு சந்தை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மக்கள் மரக்கறிகளை கொள்வனவு செய்ய வருகை தருவது குறைவாக இருந்தமையால் வியாபாரிகள் மரக்கறி விற்பனையை கைவிட்ட நிலையில் சந்தை கட்டடமும் மூடப்பட்டது.

இந்நிலையில் வலி.வடக்குப் பிரதேச சபை மீள தெரிவான நிலையில் சந்தையை இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் சொந்த இடத்தில் இயங்க செய்வது எனவும் சந்தையை சூழவுள்ள பகுதிகளில் வீதியோர மரக்கறி விற்பனைக் கடைகளில் மரக்கறி விற்பனையை இடைநிறுத்தி சந்தையில் மாத்திரம் மரக்கறி விற்பனை மேற்கொள்ள வேண்டும் எனவும் சந்தைக் கட்டடத்தில் வியாபாரிகளுக்கான இட ஒதுக்கீடுகளையும் விரைந்து ஏற்படுத்திக் கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் விரைவில் சந்தை வியாபார நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் சந்தையில் வியாபாரத்திற்கு இடம் பெற்ற ஒருவர் நேற்றைய தினமே தனது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## தன்னைத்...

சுப் பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மன உளைச்சலில் இருந்த இராணுவ சிப்பாயே இவ்வாறு தற்கொலைக்கு முயற்சித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,30)

## கிளிநொச்சியில்...

வவுனியா நோக்கிப் பயணித்த அரச பேருந்துடன் முறிகண்டிப் பகுதியில் இருந்து மணல் ஏற்றி யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் மோதியதில் இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் அரச பேருந்தின் சாரதி மற்றும் பயணிகள் இருவர் மற்றும் டிப்பர் சாரதி உட்பட நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,316)

## பேருந்தைச்...

எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 25ஆம் திகதி அன்று காலை 9.45 மணியளவில் மன்னாரிலிருந்து புறப்பட்ட தனியார் பேருந்தின் சாரதி, தனங்கிளப்பு வரையிலான பயணத்தின் போது, வீதிப் பாதுகாப்பு மற்றும் சேவை விதிமுறைகளை மீறி, கைபேசியில் உரையாடியவாறு பேருந்தைச் செலுத்தியமை தொடர்பில் காணொலி ஆதாரங்களுடன் முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இம் முறைப்பாடு தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த பேருந்துச் சாரதி மறு அறிவித்தல் வரும் வரை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று, கடந்த 23ஆம் திகதி அன்று மதியம் 1.40 மணியளவில், மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்களை ஏற்றாமல் சென்ற தனியார் பேருந்து தொடர்பில், பாடசாலை நிர்வாகத்தால் அதிகார சபைக்கு எழுத்து மூலமான முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைவாக தொடர்புடைய பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்களுக்கு உத்தியோகபூர்வமான கடும் எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவைகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான விதிமீறல்கள் தொடர்பில் பொதுமக்கள் ஆதாரங்களுடன் முறைப்பாடுகளை முன்வைக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகத் தயங்காமல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் 021 - 228 5121 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாகவும் முறைப்பாடுகளை வழங்க முடியும் எனவும் அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,33,104,285)

மஹஜன சம்பத
திகதி 2026.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 6088
D 5 1 4 4 6 7
அத சம்பத
D 4 4 6 7
சீட்டிழுப்பு இலக்கம் 663
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 294
துலாம் 12 16 45
3430

தன நிதானய
திகதி - 2026.01.28
சீட்டிழுப்பு இலக்கம் - 2118
U 09 40 49 52 U

மெகா பவர்
திகதி 28/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2436
V 03 47 54 64 70

ஜய
திகதி 2026.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 0356
Y 7 6 7 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4330
சீட்டிழுப்பு திகதி 28.01.2026
C 01 41 42 47
C

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 1397
மேடம் 16 38 49 51 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல்
28.01.2026 வெற்றி வாரம் 0796
0 4 4 7 8 3 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,009,737.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3062
சீட்டிழுப்பு திகதி 2026.01.28 தினம் புதன்கிழமை
05 28 29 67 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,567,216.80

சனிதா
திகதி 28.01.2026 வெற்றி வாரம் 5223
23 32 64 76 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,863,709.20

சசிரி
வெற்றி வாரம் 892
சீட்டிழுப்பு திகதி 28.01.2026
புதன்கிழமை
08 24 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,389,880.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4774
சீட்டிழுப்பு திகதி 28.01.2026 தினம் புதன்கிழமை
20 24 41 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,314,847.20

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 08 02 06 39 41
சீட்டிழுப்பு வாரம் 2238
28.01.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.624,259,034.40

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2888
சீட்டிழுப்பு திகதி: 2026.01.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,352,973.60
05 41 56 64 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MEN
POWERING TRANSFORMATION

MEN Power Tools சேவை முகாம்
ஜனவரி மாதம் 29, 30 மற்றும் 31 ஆகிய தினங்களில்
மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை
இலவசம்..

Power Tools இற்கு
30% வரை விலைக் கழிவு



City Hardware & Stores
No.55,57, Stanley Road, Jaffna.
021 222 2901 / 077 457 6963
*Condition apply

Mans Lanka (Pvt) Ltd
No.38, 3rd Cross Street, Colombo 11, Sri Lanka.
www.manslanka.com
Irfan - 071 0677324
Bahirathan - 071 7016780
(6682)


# திருமலையில் மாயமான மாணவன் மீட்பு

திருகோணமலையில் கடந்த திங்கட்கிழமை காணாமல்போனதாகத் தேடப்பட்டு வந்த சட்டத்தரணி ஒருவரின் மகனான 17 வயதுடைய மாணவன் நிட்டம்புவப் பகுதியில் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்ததுடன் கடத்தல்காரர்களிடமிருந்து தப்பி ஓடிவந்ததாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்,

மாணவனின் உடலில் அடிகாயங்கள் காணப்படும் நிலையில் மாணவன் எதற்காகக் கடத்தப்பட்டார்? கடத்தல் காரர்கள் யார்? என்பது தொடர்பான விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் முடுக்கி விட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த மாணவருடன் தொடர்புபடுத்தி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட மற்றொரு தகவல் குறித்து பொலிஸார் தெளிவு படுத்தியுள்ளனர்.

திருகோணமலை பஸ் தரிப்பிடத்தில் காணாமல்போனதாகக் கூறப்பட்ட 22 வய்துடைய யுவதி ஒருவர், தனது காதலனுடன் சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்த யுவதியின் சம்பவத்திற்கும் மாணவன் கடத்தப்பட்ட சம்பவத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)


SLIIT | NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
AFTER O/L'S, A/L'S?
MEET OUR LECTURERS TO PLAN YOUR HIGHER EDUCATION PATHWAY
WELCOME TO
JAFFNA EDUCATION FAIR 2026
Your Future Begins Here...
JAN 31 - FEB 01
VALAMPURI HOTEL, JAFFNA
STALL NO - C2
(C-4903)
இங்கு வருகை தந்து பதிவு செய்யும் மாணவர்களுக்கு "15% - 20% ON THE SPOT REGISTRATION" சலுகை வழங்கப்படும்
SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna
077 147 1471
021 7534 807

உடனடி வேலைவாய்ப்பு
முகமாலை பளையில் உள்ள பிரபல உணவகம் ஒன்றிற்கு சமையலாளர் - 02, கொத்துரொட்டி, பிறைட் ரைஸ், சிற்றுண்டி தயாரிப்பாளர் - 02, பரிமாறுபவர் (Supplier) - 01
074 070 5066, 077 488 4030, 077 229 9944
(6672)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் வயித்திலிங்கம் பரமேஸ்வரி

**(கண்ணன் லொட்ஜ் – பரமேஸ்வராச் சந்தி, உரிமையாளரின் மனைவி)**

**தோற்றம் : 10.11.1952 மறைவு : 01.01.2026**

அன்பின் திருவுருவாக மிளிர்ந்து, குடும்பத்தின் ஆணிவேராக விளங்கி, கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள், ஊரவர்கள் என அனைவரையும் தனது அன்பினால் அரவணைத்து ஒரு முன்னுதாரணமான பெண்மணியாக வாழ்ந்து இத்தியடிப் புலத்தாளின் பாதார விந்தக் கமலங்களைப் பற்றிக்கொண்ட அமரர் பரமேஸ்வரி வயித்திலிங்கத்தின் அந்திமத்தின் போது நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமாகவும் அஞ்சலி உரைகள் மூலமாகவும் மலர்வளையங்கள் வைத்தும் இன்னும் எல்லா வழிகளிலும் தமது அனுதாபங்களையும் அன்பையும் வெளிப்படுத்திய உள்ளங்கள் அனைவருக்கும் நன்றியினைப் பரிமாறிக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (29.01.2026) வியாழக்கிழமை புங்குடுதீவு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் 31.01.2026 சனிக்கிழமை அன்று இல. 119/3, முன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

இல. 119/3, முன் ஒழுங்கை,
பலாலி வீதி, திருநெல்வேலி.
(6680)

குடும்பத்தினர்
த.வயித்திலிங்கம்
021 222 0331

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.